# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 35-2022*

03.09.2022 - சனிக்கிழமை அன்று உறுப்பினர்களுக்கான தகவல் சந்திப்பு (பெற்றோர் கூட்டம்) இடம்பெறும்.

**நேரம்:** *10:00 - 10:40 (இடைவேளை 10:40-11:20) 11:20 - 11:55*
அனைத்து பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களையும் அன்போடு வரவேற்றுக்கொள்கின்றோம்.

**பாடசாலை வழமைபோல்**
மழலையர் & சிறுவர்நிலை வகுப்புகள் 09:30 - 12:00 வரையும்
1ஆம் வகுப்பு - 11ஆம் வகுப்பு வரை 09:30 - 12:30 வரையும்
இடைவேளை நேரம் 10:45 - 11:15 வரையும்
கலைவகுப்புகள் 12:45 - 13:30 வரையும் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் வகுப்பாசிரியர்கள் அறியத்தருவார்கள்.
இவ் ஆண்டுக்கான புதிய பாடநூல்களை இன்னும் பெற்றுக்கொள்ளாதவர்கள் விரைவில் கல்விப்பொறுப்பாளர்களைத் தொடர்புகொள்ளவும்.

***மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.***

சிற்றுண்டிச்சாலை வழமைபோல் இயங்கும்.

**ஆசிரியர்பணிபுரிவதற்கு ஆர்வமுள்ளவர்கள் தேவை**
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக் வளாகத்தில் ஆசிரியர் பணிபுரிவதற்கு பெற்றோர், பாதுகாவலர் மற்றும் வளாக நலன்விரும்பிகளிலிருந்து ஆர்வமுள்ள இருவர் தேவைப்படுகின்றனர். விரைவில் தேவை என்பதனால் எதிர்வரும் 31.08.2022 இற்கு முன்னதாக வளாக மின்னஞ்சலுக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிப்பவரின் சுயவிபரம் மற்றும் இப்பணிக்கான ஆர்வம் பற்றிய கண்ணோட்டம் என்பனவற்றை இவ்விண்ணப்பத்துடன் இணைக்கவும்.

அறிவாடல் 2022 - அனைத்துலக மாணவர்களுக்கான இணையவழி அறிவாடல் போட்டி. இறுதிப்போட்டி 22.10.2022 நடைபெறும்.

விண்ணப்பமுடிவுத்திகதி 25.09.2022 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பபடிவம் எமக்குக் கிடைத்தவுடன் வைபர்குழுமங்களில் அனுப்பிவைக்கப்படும்.

மாற்றங்களும் மேலதிக விபரமும் எமக்குக் கிடைத்தவுடன் தங்களுக்கு அறியத்தருவோம்.

நிதி

கட்டணங்களை இன்னும் செலுத்தாதவர்கள் விரைவில் செலுத்தும்படி வேண்டுகின்றோம். இதுவரை கட்டணங்களைச் செலுத்தாதவர்களுடன் நாம் விரைவில் தொடர்புகொள்வோம்.

## பெற்றோர்குழுத்தெரிவு

விரைவில் பெற்றோர்குழுவின் பொறுப்பாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். தெரிவின் பின் அடுத்தவார வாராந்தத் தகவலினூடாக யார் பொறுப்பேற்றுள்ளார்கள் என்ற விபரம் அறியத்தரப்படும்.

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!

# அன்னை உறுப்பினர் தகவல் சந்திப்பு 2022

திகதி: 03.09.2022 நாள்: சனிக்கிழமை

நேரம்: 10.00 - 11.55 *(இடைவேளை 10:40-11:20)*

இடம்: ஓசன் பாடசாலை மேல்க்கட்டிடம்

நிகழ்ச்சிநிரல்:

- அகவணக்கம்
- நிர்வாக விபரம் 2022-2023 - மாற்றம்
- கல்வி - ஆண்டுத்திட்டம் 2022-2023
- பெற்றோர்குழு 2022 - 2023
- பாடசாலை-விதிமுறையும் ஒத்துழைப்பும்
- கட்டணம்
- கலைப்பாடம் - நவராத்திரி மற்றும் நத்தார்விழா 2022
- நிர்வாகத் தெரிவுக்குழு
- கணக்காய்வாளர்
- தேநீர்ச்சாலைக் குழு - நிதிக்குழு 2022 - 2023
- இதரவிடையம்

இங்ஙனம்

நிர்வாகம் - அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்